# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 24.10.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது பிள்ளைகளின் ஆமீன் விழா (குர்ஆன் ஓதி முடித்ததற்காக நடத்தும் விழா) விற்காக பலவிதமாக துஆ, கவிதைகளை இயற்றியுள்ளார்கள். அதில் இறைவனது அருள், கருணை பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். அதன் ஒவ்வொரு கவிதையும் **சுப்ஹானல்லதீ அக்ஸல் அஆதி** – எனது எதிரிகளை இழிவுக்கு ஆளாக்கிய இறைவன் தூயவன் என்ற வாசகத்துடன் முடியும்.

இந்த கவிதையின் ஒரு வரி **ஹுவா தேரே ஃபஸ்லோன்கா முனாதி ஃபசுப்ஹானல்லதீ அக்ஸல் அஆதி** என்பதும் ஆகும்.

அதன்படி அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப ஜமாஅத்தின் மீது அருள் மழை பொழிந்து கொண்டிருக்கிறது. அல்லாஹ் அன்னாரின் வஃபாத்திற்கு பிறகு 100 ஆண்டுகள் கழிந்த பின்னரும் கூட தனது அருளைக் கொண்டு அவர்களது ஜமாஅத்திற்கு அருள் புரிந்து கொண்டேதான் இருக்கின்றான். இன்ஷா அல்லாஹ். எப்போதும் அவனது அருள் மழையின் (கரம்) இருக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு ஒரு நிச்சய உறுதியை ஏற்படுத்தியுள்ளார்கள். உங்கள் மீது பொழிந்து கொண்டிருக்கிற மழை தொடர்ந்து பொழிந்து கொண்டே இருக்கும். ஆம். வழியில் சில தடைகள் ஏற்படும். அல்லாஹ் தனது அருளால் அதனை அகற்றிக் கொண்டே செல்வான். முன்னேறிக் கொண்டே செல்வது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்திற்கு விதிக்கப்பட்டதாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அவன் இந்த ஜமாஅத்திற்கு முழுமையான முன்னேற்றத்தை தருவான். சிறிது எனது கைகளாலும், சிறிது எனக்குப் பிறகும் வழங்குவான்.

பிறகு எதிரிகளின் எள்ளி நகையாடல் பற்றி குறிப்பிட்டு விட்டு கூறினார்கள். அவர்கள் எள்ளி நகயைாடி முடித்த பிறகு இறைவன் தனது இன்னொரு அருளின் கரத்தை நீட்டுவான். முழுமை அடையாமல் கிடந்த அனைத்துப் பணிகளையும் குறிக்கோள்களையும் முழுமை அடையத்தக்க அளவிற்கு இறைவன் காரணிகளை உருவாக்குவான்.

இவ்வாறு இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பணிகளை முழுமையடையச் செய்யவிருக்கிறான்; நிச்சயமாக செய்வான். அதற்காகவே இறைவன் கிலாஃபத் அமைப்பை அவர்களது ஜமாஅத்தில் ஏற்படுத்தினான். அதன் மூலம் அவர்கள்மீது சுமத்தப்பட்ட பணியை முழுமைப்படுத்தி விடுவான். ஜமாஅத்தை ஒரு கையில் ஒன்று திரட்டுவான். அவர்கள் ஒருயிராக மாறி பணியாற்றுவார்கள்; இறை அருளுக்கு வாரிசாவார்கள்; ஆகிக் கொண்டே செல்வார்கள்.

நன்றி உணர்வுடன் அல்லாஹ்வுடைய அருளை அழைப்பவராகுங்கள். பிறகு முன்னேற்றத்தின் இலக்குகளை கடந்து கொண்டே செல்லுங்கள். ஆகவே ஜமாஅத்துடைய முன்னேற்றத்தை நாம் ஒவ்வொரு நொடியும் பார்க்கிறோம். நாம் இந்த தியாகங்களெல்லாம் செய்துள்ளோம். நமக்கு வெற்றி கிடைத்துள்ளது. நாம் இந்த திட்டத்தை உருவாக்கினோம். அதனால் இந்த இலட்சியத்தை அடைந்தோம் என்ற எண்ணம் கூட வரக்கூடாது. ஜமாஅத்தின் முன்னேற்றத்தை நாம் எல்லா இடங்களிலும் பார்க்கிறோம். சில நாடுகளில் பிரச்சனைகள் இருந்தும் முன்னேற்றங்கள் தென்படுகின்றன. இவை அனைத்தும் அல்லாஹ்வுடைய அருள்கள் வாக்குறுதிகளுக்கு ஏற்ப கிடைத்ததாகும். இதில் சிறிது கூட மனித முயற்சியின் முழு விளைவு என்ற பேச்சுக்கே இடமில்லை. எதுவரை நாம் ஒன்றாகி இறைவன் முன் குனிந்தவாறு அவனது நன்றியுள்ள அடியார்களாவோமோ அதுவரை இம்முன்னேற்றங்கள் நமக்கு கிடைத்து வரும். உண்மையான இறை அடியாராக இறைவன் நம்மை ஆக்குவானாக. அதன் மூலம் அவனது எல்லா அருள்களிலிருந்தும் பங்கு

பெற்று வருமோமாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் அவர்களது ஜமாஅத்திற்கு விதிக்கப்பட்ட அனைத்து அருள்களையும் பெறுவோமாக. எல்லா வகையான பெருமையிலிருந்தும் நமது உள்ளத்தையும் மூளையையும் தூய்மையாக்குவானாக.

கடந்த இரண்டு குத்பாக்களையும் பயணத்தில் இருந்தவாறு வழங்கினேன். அல்லாஹ்வுடைய அருள்களின் மழையையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பை மக்களுக்கு இறைவன் வழங்கியிருப்பதையும் நான் கண்டது குறித்தும் சிறிது கூற விரும்புகிறேன்.

கடந்த சில நாட்கள் நான் பயணத்தில் இருந்ததை அறிவீர்கள். இந்த பயணத்தில் பிரான்ஸ், ஜெர்மனி நாடுகளில் பள்ளிவாசல் திறப்பு விழாக்கள், ஹாலந்தில் மாநாடு, பெல்ஜியத்தில் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் மாநாடு போன்றவற்றில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

பிரான்ஸில் பாரிஸுக்கு மிக அருகில் செண்டிரிக்ஸ் என்ற இடத்தில் ஜமாஅத்திற்கு ஒரு பள்ளிவாசலை உருவாக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இது பிரான்ஸில் நமது முதல் பள்ளிவாசலாகும். 1924 –ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்த போது இலண்டனில் மஸ்ஜித் ஃபஸ்ல் பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டினார்கள். கலந்துரையாடலும் நடந்தது. அதுவும் பிரபலமானது. அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அவ்வூருக்கு செல்லும் போது அங்கு அஹ்மதிகள் இல்லை. அஹ்மதியல்லாத முஸ்லிம்கள் அரசு உதவியுடன் ஒரு பள்ளிவாசல் கட்டியிருந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அங்கு சென்றார்கள். அந்த பள்ளிவாசலின் கட்டுமான வேலை முடிந்த பிறகு நடந்த முதல் தொழுகையை அன்னார் அங்கு தொழவைத்தார்கள். அங்கு சஹாபாக்களும் கூட அவர்களின் குழுவில் இருந்தனர். மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் சாஹிபும் அந்த குழுவில் இருந்தார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தம்முடன் சென்ற குழுவை பல சிறு குழுக்களாகப் பிரித்து பிரான்ஸில் உள்ள பல முக்கிய பிரமுகர்களை சந்திக்க வைத்தார்கள். சிறிது காலமே தங்கினார்கள். தங்கிய அக்கால கட்டத்தில் அங்கு தங்கியிருந்தவர்கள் ஒவ்வொருவரும் தமக்கு சுமத்தப்பட்ட பணியை செய்தனர். தொடர்பு விரிவாக இருந்தது. மக்கள் அதிகமாக சந்திக்க வந்தனர். ஆனால் முறையாக ஒரு ஜமாஅத் உருவாகவில்லை. பிறகு மிஷன் ஹவுஸும் திறக்கப்பட்டது. நான்காவது கிலாஃபத்தின் போது நமது மிஷன் ஹவுஸ் விலைக்கு வாங்கப்பட்டது. அதில் ஒரு வீடும் இருந்தது. ஆரம்பத்தில் அதுவே பள்ளிவாசலாகவும், மிஷன் ஹவுஸ் ஆகவும் இருந்தது. அதில் உள்ள ஹாலில் மக்கள் தொழுது வந்தனர். பிறகு இறைவனது அருள்மழை பொழிந்தது. சில வருடங்கள் முன்பு எனது சுற்றுப்பயணத்தில் ஒரு ஹால் தற்காலிகமாக பள்ளிவாசலாக்கப்பட்டுள்ளது. அப்போது அந்த பகுதியில் ஜமாஅத்திற்கு கொஞ்சம் எதிர்ப்பும் இருந்தது. பொதுவாக முஸ்லிம்களுக்கு நம்மைப் பற்றிய பார்வை தவறாகவே இருந்தது.

நான் ஏற்கனவே கூறியது போன்று அப்பகுதியின் மேயர் நமது தற்காலிக பள்ளிவாசலுக்கு வந்தார். தமது குழுவுடன் வந்து ஜமாஅத் சகோதரர்களைப் பற்றி விமர்சனம் செய்தார். ஜமாஅத்திற்கு மிகவும் கஷ்டம் தந்தார். 2003 ஆம் ஆண்டு இன்னொரு வீடு வாங்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டு பக்கத்து வீடும் வாங்கப்பட்டது. இப்போது அல்லாஹ்வின் அருளால் கணிசமான பரந்த ஓர் இடம் ஜமாஅத்திற்கு அமைந்து விட்டது. மூன்று வீடுகள் ஒன்றுசேர்ந்த அகலம். பின்புறம் சிறிது திறந்தவெளி. அதில் பள்ளிவாசலும் கட்டப்பட்டுள்ளது. பிறகு தங்குமிடம், விருந்தினர் இல்லம், பெரிய விழாக்களில் பயன்படத்தக்க பெரிய சமையலறையும், உணவு உண்ணும் அறையும் கட்டப்பட்டுள்ளது. இது அல்லாஹ்வின் அருளால் நடந்தது. நம்மை ஏசிய அதே மனிதர் இப்போது நல்ல முறையில் நடந்து கொள்கிறார். நம்மை ஏசியதற்காக வருந்துகிறார்.

இந்த பள்ளிவாசல் திறக்கப்பட்ட ஜுமுஆவில் மற்றவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அந்த மனிதர் நமது குத்பாவை கேட்டார். பத்திரிகை நண்பர்களுக்கு நான் பேட்டி கொடுத்தேன். இந்த ஜமாஅத்தினல் எந்த ஆபத்தும் இல்லை. நான் உத்தரவாதம் தருகிறேன். உலகில் அமைதியை நிலைநாட்டுவது தவிர வேறு எங்களுக்கு எந்த குறிக்கோளும் இல்லை என்று தெரிவித்தேன். பிறகு அல்லாஹ் அம்மனிதரின் உள்ளத்தை மாற்றியது வியப்பை ஏற்படுத்துகிறது. இங்கு தப்லீகின் மைதானம் நமக்காக திறக்கும். அதற்காக நான்

முன்னர் இதே இடத்தில் குத்பாவில் கூறியது போன்று தயாராகுங்கள். இப்போது தப்லீக் மைதானம் இங்கு திறந்து கொண்டிருக்கிறது. மக்கள்நமது பள்ளிவாசலைப் பார்க்க வருகின்றனர். ஒரு முஸ்லிம் இங்கு வந்து பள்ளிவாசலைப் பார்த்து விட்டு வியந்து போய் கேட்டார். உங்களுக்கு பள்ளிவாசல் கட்ட இங்கு எப்படி அனுமதி கிடைத்தது? இங்குள்ள மேயர் மிகவும் கடினமானவர். அதுவும் முஸ்லிம்களிடம் மிகவும் கடுமை காட்டுபவர். ஆனால் அல்லாஹ்வின் அருளால் முஸ்லிம்களுக்கு அநீதியிழைக்கக் கூடியவர் என்று கருதப்பட்ட அம்மேயர் அனுமதி தந்தது மட்டுமின்றி பத்திரிகைகளையும நமது பள்ளிவாசல் பற்றிய செய்தியை வெளியிடச் செய்தார்.

அங்குள்ள ஒரு பத்திரிகையின் பெயர் ஜின்பெயரே என்பதாகும். அக்டோபர் 10, 2008 அன்று அது வெளியிட்ட செய்தி:

பிரபலமில்லாத ஓர் இயக்கம் அமைதி வழியில் கண்ணியமிக்க ஓர் இஸ்லாத்தை எடுத்து வைக்கிறது.

அவர்களைப் பொருத்தவரையில் இஸ்லாத்தைப் பற்றிய கண்ணோட்டம் மிகவும் தவறாகவே இருந்தது. எனவேதான் கண்ணியமிக்க ஓர் இஸ்லாத்தை நாம் எடுத்து வைப்பதாக செய்தி வெளியிட்டது.

இம்மக்கள் அமைதியை விரும்புபவர்கள் என்பதற்கு நாங்கள் சாட்சி. இம்மக்கள் நகரத்தின் வளர்ச்சிப் பணிகளில் பங்கெடுக்கின்றனர். இன்னும் பல விஷயங்களை வெளியிட்டு இப்பத்திரிகை ஜமாஅத்தைப் பற்றி நன்றாக அறிமுகம் செய்து வைத்துள்ளது. 1889 ஆம் ஆண்டு இந்தியாவில் நிலைநாட்டப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாதம் இன்று 193 நாடுகளில் பரவியுள்ளது. பல மில்லியன் மக்களிடம் சென்று சேர்ந்துள்ளது. வன்முறைக்கு எதிரான இயக்கம் வன்முறைக்கு இலக்காக்கப்படுகிறது. எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் பகையில்லை என்பது இவர்களது இலட்சிய முழக்கம். இத்தகைய செய்திகள் வெளிவந்துள்ளன. இந்த செய்திகள் மக்களது சிந்தனையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு பத்திரிகைகள் ஒருபுறம் எழுதி வருகின்றன. இன்னொரு புறம் மக்கள் பள்ளிவாசலைக் காண வருகின்றனர். பிறகு மக்கள், மீடியாக்கள் எல்லாம் இஸ்லாமிய போதனைகள், பள்ளிவாசல்களின் நோக்கம், அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை உலகத்திற்கு கொணடு வந்து கொண்டிருக்கின்றன. அமீர் சாஹிப் இந்த செய்திகளையும், மக்கள் வருகையையும் கண்டு அந்நாளில் மிகவும் சிரமத்திற்குள்ளாகி விட்டார். பத்திரிகை செய்தி வந்த பிறகு இன்னும் அதிகம் மக்கள் பார்க்க வருகின்றனர். நாம் இவ்வளவு பணிகள் செய்வோம் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை. இவையெல்லாம் இறைவனது வேலைகளாகும். அந்த நேரம் வரும்போது இறைவனின் செயல் தனது ஆற்றலை வெளிப்படுத்துகிறது. பிரான்ஸ் நேஷனல் டிவி வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணி செய்தியில் முதன்முறையாக ஜமாஅத் செய்தியை ஒளிபரப்பியது. நமது குத்பாவின் காட்சியை ஒளிபரப்பியது. MTA என்ற ஒரு சேனல் நமக்கு இருப்பது பற்றியும் மக்களுக்கு அறிமுகப்படுத்தியது. அதே போன்று பிரான்ஸ் 24 என்ற இவர்களது ஒரு சேனல் நமது தொடக்க உரையை காட்டியது. பிறகு ஒரு டாக்குமெண்டரி ஒளிபரப்பியது. அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பற்றியும் ஜமாஅத் பற்றியும் அறிமுகப்படுத்தியது. நமது டிவி சேனல் பற்றி கூறியது. பிரான்ஸின் மஸ்ஜித் முபாரக் பள்ளிவாசலின் அழகிய தோற்றத்தை ஒளிபரப்பியது. பிறகு பெர்லின் மஸ்ஜித் பற்றியும் கூறியது. அது 17 அக்டோபர் 08 -ல் திறக்கப்படவுள்ளதாக அறிவித்தது. பிரான்ஸ் 24 என்ற இவர்களது டிவி சேனல், BBC போன்ற சேனல் ஆகும். இதனை இங்கிலாந்து, பிரான்ஸ், அரபு நாடுகள் மற்றும் முழு உலகிலும் பார்க்கப்படும். இந்த டிவி சேனல் நான்கு முறை நமது செய்தியை வெளியிட்டுள்ளது. இருமுறை கிரீஸ் மொழியிலும், ஒரு முறை பிரெஞ்ச் மொழியிலும், ஒரு முறை அரபியிலும் ஒளிபரப்பியது. பிறகு கடைசியில் அந்த சேனல் முழு உலகிலுமுள்ள அஹ்மதிகள் எமது பள்ளிவாசல் பிரான்ஸ் சென்ட்ரிக்ஸில் உள்ளது என கூறிக் கொள்ளலாம். இந்த அளவு செய்தி வெளியிட நமது கையில் வசதிவாய்ப்பும் இல்லை. இருந்தால்கூட நமக்கு இவ்வளவு Coverage கிடைத்திருக்காது. இவை அனைத்தும் மீடியாக்கள் தாமே வந்து Coverage செய்தவையாகும். இந்த அறிமுகத்தினால் ஒரு ஆப்பிரிக்க நாட்டின் டிவி சேனலும், மொரீஸீயஸின் ஒரு டிவி சேனலும் நமது பள்ளிவாசல் திறப்பு விழா காட்சியை ஒளிபரப்பியது. ஒரு பள்ளிவாசல் உலகில் பல பகுதிகளில் ஜமாஅத்தைப் பற்றி தெரிய வைத்துள்ளது. தப்லீகிற்கு புதிய வழிகள் திறந்துள்ளன. மாலையில் தேனீர் விருந்து நடந்தது. அதில் பிரான்ஸில் முக்கிய பிரமுகர்கள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர். அங்கு இஸ்லாமிய போதனையை எடுத்து வைக்கும் வாய்ப்பு நமக்கு கிடைத்தது. சில ஆண்களும், பெண்களும் எனது உரையில்

நான் சுட்டிக்காட்டிய நிகழ்ச்சிகளைப் பற்றி தமது உணர்வை வெளிப்படுத்தினர். இஸ்லாத்திற்கு ஆரம்ப காலத்தில் இழைக்கப்பட்ட அநீதிகளை அதில் நான் குறிப்பிட்டிருந்தேன். இஸ்லாத்தின் மீது அநீதியிழைக்கப்பட்டது குறித்து நம்மிடம் இதுவரை எவரும் கூறியது இல்லை. அநீதியிழைக்கக்கூடிய ஓர் இஸ்லாம் பற்றியே எமக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அநீதிக்கு ஆளான ஓர் இஸ்லாம் பற்றி இப்போதுதான் கேள்விப்படுகிறோம் என அவர்கள் வியந்துபோய் கூறினர்.

ஓர் ஜெர்மனியர், ஜெர்மனியில் இஸ்லாத்தைப் பற்றி ஒரு சிந்தனை மக்களிடம் வந்துள்ளது. அம்மக்கள் முஸ்லிமாக வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன் என்று கூறினார். நான் Protestant கிறிஸ்தவன். இருந்தாலும் திருக்குர்ஆன் வைத்துள்ளேன். அதனை கண்ணியத்துடன் படிக்கிறேன்.

இவ்வாறு அங்கு தப்லீக் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. புதிய புதிய வழிகள் திறந்து கொண்டிருக்கின்றன. அல்லாஹ் நமது முயற்சிகளுக்கு நல்ல விளைவு ஏற்படுத்துவானாக.

பிரான்ஸ் பயணத்திற்கு பிறகு ஹாலந்து ஜல்ஸாவுக்கு சென்றேன். ஜுப்ளி ஜல்ஸாவாக நடைபெற்றது. பத்திரிகை பிரமுகர்கள் வந்திருந்தனர். செய்தியும் வெளியிட்டனர். ஜமாஅத்தின் கணிசமான அறிமுகம் அங்கு ஏற்பட்டது. அல்லாஹ்வுடைய அருள்களை எவ்வளவு எண்ணினாலும் நம்மால் எண்ணிவிட முடியாது.

ஹாலந்திலிருந்து பெர்லின் சென்றேன். 5 மணி நேரம் பயணம் செய்து அங்கு சென்றேன். பெர்லின் மஸ்ஜித் திறப்பு விழாவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால் உள்ளூர் எதிரிகள் ஜமாஅத்தைப் பற்றி தவறான எண்ணம் கொண்டிருந்தனர். அந்த எதிர்ப்பால் அங்குள்ள அமீர் சாஹிபும் மிகவும் சிரமப்பட்டார். உள்ளூர் மக்களின் எதிர்ப்பு ஒருபுறம் இருந்தது. அரசின் தரப்பிலிருந்தும் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அழைக்கப்பட்டவர்கள் தவிர வேறு அஹ்மதிகள் யாரும் வெளியிலிருந்து வரக்கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ஒருபுறம் அரசின் இந்த கட்டுப்பாடுகள் தேவைதான். ஆனால் தேவைக்கு அதிகமான எச்சரிக்கை உணர்வு அரசிடம் காணப்பட்டது. அல்லாஹ் பெரும் அருள் செய்தான். ஒரு அமைப்பு நமது பள்ளிவாசல் திறக்கவிருந்த நாளன்று ஒரு பிரசுரம் வெளியிட இருந்தது. ஆனால், பள்ளிவாசல் திறக்க இருந்த முந்தைய நாளில் அந்த அமைப்பு எந்த பிரசுரத்தையும் நாங்கள் வெளியிடப்போவதில்லை என்று அறிவித்து விட்டது. ஆனால் பத்திரிகையாளர்களுக்கும், காவல்துறையினருக்கும் அவர்கள் சொன்னபடி பிரசுரம் வெளியிடாமல் இருப்பார்களா என்ற சந்தேகம் இருந்தது. நமது எதிரிகள் அவ்வளவு எளிதில் தமது முடிவை மாற்றக்கூடியவர்கள் அல்லர் என்பது அவர்களது எண்ணம். தாம் ஏமாந்து விடக்கூடாது என்பதில் காவல்துறை எச்சரிக்கையாக இருந்தது. ஆனால் மனிதன் சிந்தித்து கூட பார்க்க முடியாத ஒரு காற்று வீசியது. ஜமாஅத் சகோதரர்கள் ஒரு நீண்டகாலமாக தவறான எண்ணத்தை அகற்ற முயற்சி செய்து வந்தனர். இஸ்லாத்தின் உண்மையான போதனை மஸ்ஜிதின் நோக்கம் பற்றி சந்தேகம் எழுப்பப்பட்டு வந்தது. நமது தரப்பிலிருந்து பதிலும் சொல்லப்பட்டு வந்தது. ஆனால் அவர்கள் திருப்தி அடையவில்லை. ஒவ்வொரு நாளும் ஒரு சர்ச்சையை கிளப்பிக் கொண்டிருந்தனர். அல்லாஹ்வுடைய அருள் என்பதைத் தவிர நடந்த சம்பவத்திற்கு வேறு எதனைக் காரணம் என்று கூற முடியும்? எதிரிகள் நமக்கு எதிராக அறைகூவல் விடுத்த போது இந்நகரின் கண்ணியத்திற்குரிய மக்கள் நமது சார்பாக கருத்தை வெளியிட்டனர். பிறகு கண்ணியத்திற்குரிய மக்களின் உள்ளத்தை அல்லாஹ் இன்னும் திறந்தான். நமக்கு வெற்றி கிடைத்தது. அவர்கள் இஸ்லாத்தின் அழகிய போதனையைப் புரிந்து கொள்பவராக மாறினர்.

திறப்பு விழாவுக்கு முன் ஒரு பத்திரிகை எழுதியது:

புதிய பள்ளிவாசல் திறப்பு விழாவிற்கு வாழ்த்துக்கள். திருக்குர்ஆனின் காணாமற்போன முழக்கங்கள் இப்போது திரும்பவும் கேட்கத் தொடங்கியுள்ளன. முஸ்லிம்கள் ஜெர்மனியின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாகி விட்டனர் என்பதற்கு இதுவோர் ஆதாரமாகும்.

அஹ்மதிகள், சுன்னி, சியா எல்லாரும் பள்ளிவாசல் கட்டுகின்றனர். ஒரு கட்சி ஒரு நகரத்தில் தனது கொள்கையைப் பரப்ப விரும்பும்போது என்ன செய்யுமோ அதுபோன்றுதான் இவர்களின் நிலை. ஒரு பெண் ஒரு வேலை செய்யுமுன் தனது கணவரிடம் அனுமதி வாங்குகிறாள். இன்று ஐரோப்பாவில் பலவிதமான கருத்துகள் பரவியுள்ளன.

ஆனால், இன்று அஹ்மதி முஸ்லிம்கள் உலகில் எங்கு பள்ளிவாசல் கட்டினாலும் நாம் அவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கலாம். ஆனால், அவ்வூரின் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையிலிருந்து விலகியவர்களாக கருத முடியாது.

அதாவது நகரத்தின் மக்களுக்கு கருத்து சுதந்திரம் இருக்கிறதாம். அதன் உரிமை வழங்குவதின் கடமையை நாம் ஒருபோதும் மறுக்கக்கூடாதாம். நாம் அதனை விரும்பவும் இல்லை.

மேலும் அவர் எழுதுகிறார்: முஸ்லிம்களின் மார்க்க உணர்வைப் பார்த்து கத்தோலிக் மற்றும் Protestants இன்னும் அதிகம் தமது மார்க்கத்தின் பக்கம் தூண்டப்படுகின்றனர். மார்க்கங்களிடம் மார்க்கரீதியாக ஒரு முன்னேற்றம் ஏற்படுகிறது. இவ்வாறு ஒரு சுதந்திர சிந்தனை இங்கு காணப்படுகிறது. முஸ்லிம்களும் இதனை புரிய முடியும்? இந்த முஸ்லிம்கள் அஹ்மதிகளுக்கு எதிராக பொதுமக்களிடம் தவறான கருத்தைப் பரப்புகின்றனர். அதனை மாற்றிக்கொண்டு தத்தமது நாட்டில் ஒரு விசுவாசத்தை உருவாக்குங்கள். குறிப்பாக பாகிஸ்தானில் உருவாக்குங்கள்.

குறிப்பாக பத்திரிகைகள் இந்த உள்ளூர் எதிர்ப்புக்களினால் பள்ளிவாசல் திறக்கும் முன்பே பள்ளிவாசலுக்கு ஒரு விளம்பரத்தை தேடித் தந்து விட்டனர். மக்களும் ஆர்வமாகி விட்டனர். ஒரு ஜெர்மனி பெண் இந்த செய்திகளைப் படித்து விட்டு நமது பள்ளிவாசலில் வந்து கூறுகிறார். இங்கு ஒரு பள்ளிவாசல் திறக்கப்படவிருக்கிற செய்தியை நேற்றும் இன்றும் பத்திரிகைகள், டிவி மூலமாக பார்க்கிறேன். அதற்கு கலீஃபா வந்திருப்பதாகவும் அறிகிறேன். அது என்னவென்று தெரிந்து கொள்ள வந்துள்ளேன். அவரை சந்திக்க வந்துள்ளேன். திறக்கப்படவிருந்த வெள்ளிக்கிழமையின் முந்தைய நாளான வியாழன் அன்று மாலை தேநீர் விருந்து இருந்தது. அதில் பல முஸ்லிம்களும் ஜெர்மனியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். மேயர், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். சிலருக்கு தமது கருத்தை தெரிவிக்க வாய்ப்பும் தரப்பட்டது. அவர்கள் ஜமாஅத்தைப் பற்றி மிகவும் நல்ல கருத்தை வெளியிட்டனர். கடைசியில் நான் இஸ்லாத்தின் அழகிய போதனை, மஸ்ஜிதின் முக்கியத்துவம் மற்றும் அதுபற்றிய நமது போதனைளை விளக்கினேன். கேட்ட அனைவரும் கவனமாகக் கேட்டது மட்டுமின்றி அவர்கள் அனைவரும் நமது கருத்தில் ஈர்க்கப்பட்டனர் என்பதும் அவர்களது முகத்தில் இருந்து தெரிய வந்தது. அவர்களுக்கு ஆச்சரியமாகவும் இருந்தது. ரசிக்கவும் செய்தனர். சிலர் குறிப்பும் எடுத்தனர். பலர் நம்மிடம் தமது கருத்தை வெளியிடவும் செய்தனர். இஸ்லாம் பற்றி இன்று பல புதிய விஷயங்களை தெரிந்து கொண்டதாகக் கூறினர். அல்லாஹ்வின் அருளால் முழு உலக மீடியாக்களும் இதனை Coverage செய்தன. அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் தப்லீகிற்கு புதிய களங்கள் நமக்காக திறக்கப்பட்டுள்ளன. முழு உலகிலும் 148 பத்திரிகைகள் மஸ்ஜித் பெர்லின் கதீஜா பள்ளிவாசலின் திறப்பு விழா செய்தியை வெளியிட்டன. ஜெர்மனி தவிர 16 நாட்டு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. அவை: அமெரிக்கா, ஆஸ்திரேலியா, துருக்கி, பஹ்ரைன், நியூசிலாந்து, பிரிட்டன், பாகிஸ்தான், இலங்கை, கனடா, குவைத், பிரான்ஸ், ஸ்காட்லாந்து, இந்தியா, தைவான், ஹாலந்து, சவூதி அரேபியா போன்ற நாடுகளின் பத்திரிகையாகும். பல Magazine –களும் நமது செய்திகளை வெளியிட்டுள்ளன. பல நாளிதழ்களும் செய்தி வெளியிட்டுள்ளன. (ஹுஸுர் அவர்கள் அந்த நாளிதழ்கள், Magazine களின் பெயர்களைக் கூறினார்கள்.) இவ்வாறு நமது அறிமுகத்தின் களம் மிகவும் திறக்கப்பட்டது. ஜெர்மனி மற்றும் பல நாடுகளின் பத்திரிகைகள் செய்தியை வெளியிட்டுள்ளன.

ஒரு பிரபல பத்திரிகை **பிரஸ்சைக்கின்** செய்தி வெளியிட்டது: ஜெர்மனியின் முதல் அமைச்சர் வாழ்த்து தெரிவித்தார். இப்பள்ளிவாசல் சகிப்புத்தன்மை, மன்னிப்பின் ஓர் அடையாளம் என்று அவர் தெரிவித்தார். ஜெர்மனியின் ஓர் இணை அமைச்சர் அஹ்மதிகளின் சகிப்புத்தன்மை பற்றி மிகவும் குறிப்பிட்டார். அஹ்மதிகளின் ஐந்தாவது கலீஃபா அவர்கள் அனைவருக்கும் தமது நன்றியை தெரிவித்தார். கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பள்ளிவாசல் கட்ட அனுமதி கொடுத்ததற்காக தமது நன்றியை தெரிவித்துக் கொண்டார். ஜெர்மனியின் மீது மிகவும் விசுவாசத்துடன் நடக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். பள்ளிவாசலின் எதிர்ப்பாளர்கள் பற்றியும் சிறிது கூறினார். அவர்களுக்காக துஆ செய்தார். தனது நம்பிக்கையை வெளிப்படுத்தினார். அஹ்மதிகள் ஜெர்மனியின் நிரந்தர பங்குதாரர்களாக கருதப்படுவர் என்ற தனது எதிர்பார்ப்பை கூறினார்.

**தின்வேலி** என்பது ஜெர்மனியின் பெரிய பத்திரிகையாகும். அது இவ்வாறு கூறுகிறது. இஸ்லாமிய அமைப்பின் ஒரு பள்ளிவாசல் என்ற தலைப்பில் நமது செய்தியை வெளியிட்டது. மற்ற இஸ்லாமிய அமைப்புகளால் இதனை இஸ்லாமிய அமைப்பு என்று கருதப்படுவதில்லை. ஓர் இஸ்லாமிய அமைப்பின் செயலர் Mr. இஹ்ஸான் இந்தப் பள்ளிவாசலின் நிர்மாணம் ஜெர்மனி சமுதாயத்தில் ஒரு Integration போன்று முக்கியமான ஓர் அடி வைத்தல் ஆகும். நான் பள்ளிவாசல் திறப்பு விழாவிற்காக மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில் இஸ்லாத்திற்கு எதிரான குரல்களுக்கு முழு ஜெர்மனியின் இஸ்லாமிய அமைப்புகள் பதலளிக்கவில்லை. எல்லாருக்கும் கருத்து சுதந்திரம் உண்டு. அதேபோன்று தான் இந்த பள்ளிவாசலுக்கு எதிராகவும் எந்த எதிர்ப்பும் செய்யக்கூடாது. ஒரு ஒரு புதிய பள்ளிவாசலாகும். இதனை திறந்து வைப்பதற்காக அதன் கலீஃபா இலண்டனிலிருந்து இங்கு வந்துள்ளார். அதனை நாம் எதிர்க்கக் கூடாது.

பிறகு ஒரு பத்திரிகையான டேஜஸ் ஃபீகல் பெர்லின் இவ்வாறு கூறுகிறது. இலண்டனிலிருந்து வந்துள்ள மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் தனது துவக்கவுரையில் அரசுக்கும், முக்கிய பிரமுகர்களுக்கும், பல எதிர்ப்புகளுக்கிடையிலும் வந்ததற்காக தமது நன்றியைத் தெரிவித்தார். மேலும் கூறினார். இஸ்லாம் ஓர் அமைதியை விரும்பும் மார்க்கமாகும். எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் பகையில்லை என்பதை MTA முழு உலகிலும் ஒளிபரப்பியது. பாராளுமன்ற சபாநாயகர் உட்பட 250 பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அனைவரும் மார்க்கச் சுதந்திரம் பற்றி குறிப்பிட்டனர்.

முழு ஜெர்மனி மக்களும் வாசிக்கக்கூடிய மிக பிரபலமான இன்னொரு பத்திரிகையும் நமது செய்திகளை மிக நன்றாக வெளியிட்டது. கடைசியில் எழுதியது, இந்த பள்ளிவாசல் பெண்களால் கட்டப்பட்ட பள்ளிவாசலாகும். ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் மனைவியின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

சிலர் நமக்கு எதிராகவும் எழுதினர். உள்ளூரில் நமக்கு எதிராக பேசக்கூடிய சிலர் கூறினர். அஹ்மதிய்யா பிரிவு பெண்களுக்கு மிகவும் அநீதியிழைக்கிறது. அது பெண்களை பர்தா அணியும்படி கூறுகிறது. அந்த செய்திக்கும் எதிராக நமது பெண்கள் கட்டிய பள்ளிவாசல் பற்றிய செய்தி அமைந்தது.

ஜெர்மனி டிவி சேனல் மிக சிறப்பாக செய்தி வெளியிட்டது. அது கூறுகிறது. கிழக்கு பெர்லினில் ஜமாஅத் ஒரு பள்ளிவாசல் கட்டியுள்ளது. அதன் திறப்புவிழா வியாழன் மாலை நடந்தது. பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இலண்டனிலிருந்து அதன் தலைவர் வந்திருந்தார். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கையின்படி நாங்கள் அமைதியை விரும்புபவர்கள், வன்முறைக்கு எதிரானவர்கள் என்று அதன் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

வாஷிங்டன் போஸ்ட் அக்டோபர் 16 ஆம் தேதி எழுதியது, பெர்லினின் கிழக்குப் பகுதியில் பெரிய மினாரா மாடத்துடன் கூடிய மஸ்ஜித் வியாழன் அன்று திறக்கப்பட்டது. எதிரிகளை போலீசார் தடுத்துவிட்டனர். கதீஜா மஸ்ஜிதின் மினாராவின் உயரம் 42 அடி ஆகும். 300 எதிர்ப்பாளர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். ஜெர்மனியில் அதிகமான முஸ்லிம்கள் மேற்குப் பகுதியில் வசிக்கின்றனர். பெர்லினில் 70 பள்ளிவாசல்கள் உள்ளன. பெரும்பாலானவை மிகவும் மறைவாக உள்ளன. பெரும்பாலான பள்ளிவாசல்கள் வெளிப்படையாக பள்ளிவாசல்கள் போன்றே தெரிவதில்லை. ஓர் அஹ்மதி பிரமுகர் கூறினார். கிழக்குப் பகுதியில் இது முதல் மஜ்ஸித் ஆக இருப்பதால் இதற்கு ஒரு முக்கியத்துவம் உண்டு.

புர்கினாஃபாஸோவில் இருந்து நமது அமீர் சாஹிப் அறிவித்துள்ளார். பிரான்ஸ் பெர்லின் பற்றி தமது டிவி சேனலிலும் செய்தி வந்துள்ளது. ஆறு பத்திரிகைகள், வானொலியிலும் செய்தி வெளிவந்துள்ளது. யூரோ நியூஸ் என்பது பிரபல ஐரோப்பியச் சேனல் ஆகும். அதுவும் பிரெஞ்சு, ஜெர்மன், ஆங்கிலம் போன்ற மொழிகளில் அதனை ஒளிபரப்பியது. இந்த சேனலில் 2 முதல் 3 நிமிடங்கள் வரை காட்சியுடன் ஒளிபரப்பியது. இந்த சேனலில் நமது செய்தயை வெளியிட வைக்க வெளிப்படையில் நமக்கு எந்த சக்தியும் இல்லை. ஆனால் அல்லாஹ் மிகத் தெளிவாக தனது ஆற்றலை வெளிப்படுத்தி இருக்கிறான். பிறகு இந்த குருடர்களுக்கு புரிய வேண்டும் என்ற எண்ணம் வருவதில்லை. அரபு நாடுகளின் பல சேனல்களும் நமது பல கொள்கைகளை திரித்தும், மறுத்தும் கூறி நமது செய்தியையும் பள்ளிவாசலின் பெயரையும் வெளியிட்டன.

ஓர் ஆச்சரியம் என்னவெனில், 1923 ஆம் ஆண்டிலும் பெர்லின் மஸ்ஜித் கட்ட முயற்சி செய்யும்போது ஓர் இஸ்லாமிய அமைப்பு ஜெர்மனி அரசாங்கத்தைப் பார்த்து கூறியது, இது ஆங்கிலேயர்கள் நாட்டிய

செடியாகும். நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். ஜெர்மானியர்களுக்கு எதிராக ஆங்கிலேயர்கள் இவர்களை உருவாக்கி உள்ளனர்.

அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், அங்கு மவ்லவியாக இருந்த முபாரக் அலி சாஹிப் அவர்களிடம் ஒரு கட்டுரை எழுதி அனுப்பி வைத்தார்கள். அதில் மேற்கண்ட கருத்தை விரிவாக மறுத்து விளக்கினார்கள். இச்செய்தியையும் மக்களுக்கு வெளியிடுமாறு அவர்கள் கூறினார்கள். அதே குற்றச்சாட்டு இன்றும் செய்யப்படுகிறது. தற்செயலாக எனக்கு அது கிடைத்தது. நாம் எந்த நாட்டில் இருக்கிறோமோ அந்நாட்டிற்கு விசுவாசிகள் ஆவோம். ஆனால் நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் இஸ்லாத்தை பரப்புவது நமது பணியாகும். நாம் அதனை தொடர்ந்து செய்வோம். எனவேதான், நாம் பள்ளிவாசல் கட்டுகிறோம். ஆனால் இதனை வெளியிட நமது எதிரிகளக்கு தைரியமில்லை. நமது முபல்லிக் அப்துல் பாஸித் சாஹிப் பெர்லினில் இருந்து ரிப்போர்ட் அனுப்பியுள்ளார். தொடர்ந்து மக்கள் ஜெர்மனியிலுள்ள பெர்லின் கதீஜா மஸ்ஜிதிற்கு வருகிறார்கள். இரண்டு நாட்களில் மட்டும் சுமார் 900 பேர் வந்து சென்றுள்ளனர். பள்ளிவாசலைப் பார்க்க அக்கம்பக்கத்தவர், தூரத்தில் உள்ளவர்கள் வருகின்றனர். போட்டோ எடுக்கின்றனர். ஜெர்மனி நாஸிராத், அத்ஃபால் நன்றாக அவர்களுக்கு விருந்தோம்பல் செய்தனர். மஸ்ஜித் பற்றி கேட்கின்றனர். இபாதத்துகளைப் பற்றி தெரிந்து கொள்கின்றனர். நமது சின்னஞ்சிறு குழந்தைகளின் வேலைகளைப் பார்த்து பலர் கவரப்படுகின்றனர்.

பலர் என்னிடம் வந்து வியப்புடன் கேட்கின்றனர். எப்படி 12, 13 வயது ஒன்றுமறியா சிறுவர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி சொல்லிக் கொடுத்துள்ளீர்கள். நான் அவர்களிடம் கூறினேன். எமக்கு தர்பிய்யத் தரக்கூடிய ஒரு அமைப்பு உள்ளது. குழந்தைகளுக்கும் அங்கு தப்லீக் செய்யும் வாய்ப்பை இறைவன் ஏற்படுத்தி கொடுத்துள்ளான். ஒரு அண்டை ஜெர்மனியர் எனக்கு எழுதியுள்ளார். ஒரு பக்கத்து வீட்டுக்காரர் என்ற முறையில் உங்கள் பள்ளிவாசலைப் பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நமது அருகில் இன்னொரு Culture மற்றும் இன்னொரு மார்க்கம் வந்தால் மிகவும் மகிழ்ச்சிதான்.

பெர்லின் Church -ன் பிரதிநிதி ஒரு கடிதம் எழுதியுள்ளார். ஜமாஅத் உறுப்பினர்களுக்கு Church -ன் சார்பாக வாழ்த்துக்கள்.

அல்லாஹ்வின் அருளால் எதிர்ப்புகள் பல மாறி விட்டன. பெர்லின் பள்ளிவாசல் திறப்பு விழாவிற்கு மறுநாள் அங்கிருந்து பெல்ஜியம் வந்து விட்டேன். அங்கு அம்மக்களின் இஜ்திமா இருந்தது. அங்கும் ஜமாஅத் ஒன்றாக கூடியிருந்தது. அதேநாள் மாலை இஜ்திமாவில் கலந்து கொண்டவுடன் ஊர் திரும்பி விட்டேன். உடனே திரும்பக் காரணம் இங்கு நமது மஸ்ஜித் ஃபஸ்ல் பகுதியின் சார்பாக கிலாஃபத் ஜுப்ளிக்காக Parliment House -ல் ஒரு Reception -க்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு ஒரு ஹாலில் விழா நடைபெற்றது. பல MP -க்களும், Parlimentarian -களும் கலந்து கொண்டனர். அல்லாஹ்வின் அருளால் அதிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தோற்றத்தின் நோக்கம், கிலாஃபத்தின் பணி என்ன? உலகில் அமைதியை நிலைநாட்ட என்ன வழி? இக்காலத்தில் சமூகத்தின் சமநிலையை தகர்ப்பதில் வட்டியின் பங்கு என்ன? என்பது பற்றியெல்லாம் திருக்குர்ஆனின் போதனையின் ஒளியில் எடுத்துச் சொல்லும் வாய்ப்பு கிடைத்தது. அவர்களுக்கும் மிக ஆச்சரியம்தான். சில Parlimentarian -கள் பிறகு என்னை சந்திக்க வந்தனர். நல்ல தாக்கத்தைப் பெற்றிருந்தனர். அதனை வெளிப்படுத்தவும் செய்தனர். வெறுமனே அவர்கள் நாகரிகத்திற்காக பாராட்டவில்லை. பிறகு நம்மை வந்து சந்தித்து நமது உரையின் Text தருமாறு வேண்டினர். உண்மையில் அவர்கள் ஆர்வத்துடன் கேட்டனர். பிறகு குறிப்பும் எடுத்துக் கொண்டனர். யோசிக்க வேண்டிய நிர்பந்தம் உள்ளதை உணர்ந்துள்ளனர். நமது நிர்வாக முறையை மாற்ற வேண்டும். குறைந்தபட்சம் இது நல்ல விஷயமானால் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனைக்கு அவர்கள் ஆளாகி விட்டனர். அல்லாஹ் நமக்கு Parliment House -லேயே ளுஹர், அஸர் தொழுகையை தொழும் வாய்ப்பும் தந்தான். Parliment House -ல் இஸ்லாமிய போதனைகளை எடுத்துச் சொன்னதால் இவர்களின் சிந்தனையிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. அல்லாஹ்வின் அருளால் இந்த வேலைகள் எல்லாம் நமது முயற்சிகளால் இவற்றை செய்யமுடிந்திருக்காது. நாம் இந்த அழைப்புப் பணியில் நாம் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டாலும் நமது கடமையை பூர்த்தி செய்திருக்க இயலாது. இதன் ரிப்போர்ட்டும் MTA -ல் வரும். நாம் ஆங்கிலேயர் நாட்டிய

செடி என்று நம்மைப் பற்றி இவர்கள் கூறுகின்றனர். இஸ்லாத்தின் தூதையும் திருக்குர்ஆனின் போதனையையும் இவர்களால் வளர்க்கப்படுபவன் இவர்கள் முன் எடுத்து வைக்க இயலுமா? நம்மீதுள்ள பகையே இவர்களின் கண்களை குருடாக்கி விட்டது. இறைவனின் தக்தீர் (நியதி) எங்கு செல்கிறது என்பதை இவர்கள் பார்ப்பதில்லை. தங்களின் நிலை எப்படி மோசமாகிக் கொண்டிருக்கிறது என்பதை பார்ப்பதில்லை. மாறாக, அஹ்மதிய்யத்தின் மீது எதிர்ப்பை தூண்டிக் கொண்டிருக்கின்றனர். சுருக்கமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தூதுச் செய்தியை கேட்டு ஒப்புக்கொள்வதுதான் முஸ்லிம்களின் ஒரே வழியாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அறிவற்ற மவ்லவிகள் தமது கண்ணை மூடிக் கொள்ள விரும்பினால் மூடிக் கொள்ளட்டும். அதனால் சத்தியத்திற்கு என்ன நஷ்டம். ஆனால் ஒரு காலம் விரைவில் வரவுள்ளது. பல ஃபிர்அவ்ன்கள் இந்த முன்னறிவிப்புகளை ஆய்வு செய்வதனால் மூழ்கி விடுவதிலிருந்து காப்பாற்றப்படுவர். இறைவன் கூறுகிறான். நான் தாக்குதலுக்கு மேல் தாக்குதல் கொடுப்பேன். உமது உண்மையை மக்கள் உள்ளத்தில் அமர்த்தும் வரை அவ்வாறு செய்வேன். எனவே மவ்லவிகளே! இறைவனோடு சண்டைபோட முடிந்தால் சண்டை போடுங்கள். எனக்கு முன்னால் மர்யமின் மகனுக்கு எதிரிகளால் என்ன செய்ய முடிந்தது? இறைவன் எல்லா சூழ்ச்சிகளிலிருந்தும் அவரை பாதுகாத்தான். அவர் ஒரு சூழ்ச்சிக்காரர், பொய்யர் என்று கருதப்பட்டார். ஒரு காலம் வந்தது. அவரது மகத்துவம் மக்கள் உள்ளத்தில் போடப்பட்டது. 40 கோடி மக்கள் அவரை இறைவனாகவே ஏற்கத் தயாராகி விட்டனர். இப்போது எண்ணிக்கை மிகவும் அதிகமாகி விட்டது. இம்மக்கள் ஒர் எளிய மனிதனை இறைவனாக்கி விட்டனர். குஃப்ர் செய்தனர் என்றாலும் கூட யஹூதிகளுக்கு ஒரு பதிலடியாகும். எந்த மனிதனை அவர்கள் தமது காலில் வைத்து நசுக்க நினைத்தார்களோ, அந்த மனிதன் – மர்யத்தின் மகன் பெரும் மகத்துவம் பெற்றார். 40 கோடி மக்கள் அவருக்கு ஸஜ்தா செய்கின்றனர். மன்னர்களின் தலைவர் அவர் பெயரை கேட்டதும் குனிகின்றனர். எனவே நான் மர்யமின் மகனைப் போன்று மக்கள் ஷிர்க் வைக்க காரணமாகி விடக்கூடாது என்று துஆ செய்து வந்தபோதிலும் நான் உறுதியாக நம்புகிறேன். இறைவன் எனக்கும் மகத்துவம் வழங்குவான். இறைவன் மீண்டும் மீண்டும் எனக்கு அறிவிக்கின்றான். அவன் உனக்கு மிகவும் கண்ணியம் தருவான். உனது அன்பை மக்கள் உள்ளத்தில் அமர்த்துவான். எனது இயக்கத்தை முழு உலகிலும் பரவச் செய்வான். எல்லா பிரிவுகளை விடவும் எனது பிரிவை மேலோங்கச் செய்வான். எனது பிரிவின் மக்கள் தமது சத்தியத்தின் ஒளியால் எல்லாரது வாயையும் அடைப்பர். ஒவ்வொரு சமுதாயமும் இந்த நீரூற்றில் இருந்து நீரருந்தும். இந்த இயக்கம் வேகமாக வளரும். மலரும். இடையிலே வரும் எல்லா தடைகளையும் இறைவன் முறியடிப்பான். தனது வாக்குறுதியை நிலைநாட்டுவான்.

இறைவன் என்னைக் குறித்து கூறினான். நான் உனக்கு பரக்கத்திற்கு மேல் பரக்கத்துகளை தருவேன். அரசர்கள் உமது ஆடையிலிருந்து பரக்கத் தேடுவர். எனவே கேட்பவர்களே! நான் சொன்னதை நினைவில் கொள்ளுங்கள். இந்த முன்னறிவிப்புகளை உங்கள் பெட்டியில் பாதுகாத்து வையுங்கள். இது இறைவனின் வார்த்தைகள். இவை ஒருநாள் நிறைவேறும். நான் என்னை ஒருபோதும் பெரிய ஆளாகக் கருதவில்லை. நான் விரும்பியதை செய்ய ஆற்றல் உள்ளவனும் இல்லை. என்னை இதற்கெல்லாம் தகுதியற்றவனாகவே கருகின்றேன். ஆனால் இவை அனைத்தும் இறைவனின் அருளால் நடக்கும். வல்லமைமிக்க அந்த இறைவனுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள். இந்த ஒரு பிடி மண்ணை பல்வேறு பலவீனங்கள் இருப்பினும் ஏற்றுக் கொண்டான்.

அல்லாஹ் நம்மை உண்மையான அஹ்மதியாக்கி இந்த எல்லா காட்சிகளையும் காணும் நல்வாய்ப்பினை வழங்குவானாக.

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 24.10.2008**


Translated by : **Maullim M. Nizamudeen Sb.**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**